


**12. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. வேளாண் மகளிரிடையே தலைமைத்துவத்தையும், விவசாய உணவு முறைகளையும் ஊக்குவிப்பதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லி பாரத் மண்டபத்தில் NXT சர்வதேச உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

3. எரிவாயு விவகாரத்தில் மத்திய அரசின் முயற்சிகளுக்கு தமிழக அரசு துணை நிற்கும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. தூத்துக்குடி பாலியல் வன்கொடுமை சம்பவ குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அஇஅதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

5. இந்தியன் வெல்ஸ் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு யூகி பாம்ப்ரி, ஸ்வீடனின் ஆண்ட்ரரூ இணை முன்னேறியுள்ளது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

### குடியரசு தலைவர்

வேளாண் மகளிரிடையே தலைமைத்துவத்தையும், நவீன விவசாய உணவு முறைகளையும் ஊக்குவிப்பதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வேளாண் உணவு முறைகளில் பெண்களின் பங்களிப்பு குறித்த சர்வதேச மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இத்துறையில் கொள்கை உருவாக்கம், முடிவுகள், தலைமைத்துவ பதவிகளில் பெண்கள் இடம்பெற வேண்டுமென்று குறிப்பிட்டார்.

அனைத்து நிலைகளிலும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கும் போது பாலின சமத்துவத்தை உள்ளடக்கிய வேளாண் வளர்ச்சிக்கு அது வகை செய்யும் என்றார்.

இதன் மூலம் புவியில் அமைதியும், நல்லிணக்கமும் மேம்படும் என்று குறிப்பிட்டார்.

முன்னேற்றத்தை ஊக்குவித்தல் புதிய உச்சங்களை அடைதல் எனும் கருப்பொருளுடன் இந்த 3 நாள் மாநாடு நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

### பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லி பாரத் மண்டபத்தில் NXT சர்வதேச உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

படைப்பாற்றல் திறன், புதிய கண்டுபிடிப்புகளை முன்னெடுத்துச் செல்ல வகை செய்யும் இம்மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த பல்துறை நிபுணர்கள் பங்கேற்கின்றனர்.

பிரதமர் நாளை அசாம் மாநிலம் குவஹாட்டியில் விவசாயிகளுக்கான வேளாண் நிதியுதவி திட்டத்தின் 22-வது தவணையை விடுவிக்கிறார்.

நேரடி பணப்பரிவர்த்தனை மூலம் 9 கோடியே 30 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் மொத்தம் 18 ஆயிரத்து 640 கோடி ரூபாய் விடுவிக்கப் படுகிறது.

இதுவரை 4 லட்சத்து 9 ஆயிரம் கோடி ரூபாய் வேளாண் நிதியுதவி திட்டத்தின் கீழ், விவசாயிகளின் வங்கி கணக்கில் விடுவிக்கப்பட்டுள்ளதாக வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தண்டி யாத்திரை

சுதந்திர போராட்டத்தின் வரலாற்று சிறப்பு மிகு தண்டியாத்திரை தொடங்கிய தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் தண்டி யாத்திரையில்

பங்கேற்ற துணிச்சல் மிகு விடுதலை போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதாக கூறியுள்ளார்.

சத்தியம் அஹிம்சை போன்ற விழுமியங்களுடன் சுயசார்பு பாரதத்திற்கான உத்வேகத்திற்கு இத்தினம் தூண்டுகோலாக அமைந்ததாக குறிப்பிட்டார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் சத்தியம் எப்பொழுதும் தழைத்தோங்கும் என்றும், நேர்மையான பாதையில் நடப்பதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

1930-ம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் குஜராத் மாநிலம் அஹமதாபாத் சபர்மதி ஆசிரமத்தில் தொடங்கிய யாத்திரை, ஏப்ரல் 6-ம் தேதி தண்டியில் நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

மக்களவையில் பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் பிற்பகல் 2 மணி வரை அவை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

அவை இன்று காலை கூடியவுடன் அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முயன்ற போது எதிர்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி அமளியில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து மக்களவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தம் மீதான எதிர்கட்சிகளின் நம்பிக்கையிலான தீர்மானத்திற்கு பதிலளிக்கும் வகையில் அறிக்கையை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. சி. வேணுகோபால் சமையல் எரிவாயு நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு இது முக்கியமான பிரச்சனை என்றும், அரசு இதற்கு பதிலளிக்க விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

ஆனால் அவையில் அமளி தொடரவே மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக அவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா மீதான நம்பிக்கையில்லா தீர்மானம், குரல் வாக்கெடுப்பு மூலம் நேற்று தோற்கடிக்கப்பட்டதை அடுத்து அவர் இன்று அவை நடவடிக்கைகளில் பங்கேற்றார்.

இதனிடையே அவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பாக காங்கிரஸ் கட்சியை, பி.ஜே.பி. தலைமை கொறடா டாக்டர் சஞ்சய் ஜெய்ஸ்வால் குறை கூறியுள்ளார்.

இந்த தீர்மானத்திற்கு போதிய ஆதரவை பெற எதிர்கட்சிகள் தவறிவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை - ஓம் பிர்லா

மக்களவை நடவடிக்கைகள் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் விதிகளுக்கு ஏற்ப முறையாக நடைபெறுவதை தாம் எப்பொழுதுமே உறுதி செய்ததாக மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சிகள் தமக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர், விதிகளுக்கு ஏற்ப அவையின் கண்ணியத்தை பராமரிக்க தாம் முழு பொறுப்புடன் பணியாற்றியதாக குறிப்பிட்டார்.

அவையின் மாண்பையும், கண்ணியத்தையும், மதிப்பையும் தாம் தொடர்ந்து உறுதி செய்ததாக கூறிய அவர், அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய வாய்ப்புகள் வழங்க தாம் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் S. ஜெய்சங்கர், ஈரான் வெளியுறவு அமைச்சர், திரு. அப்பாஸ் அராக்ச்சி உடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து ஹோர்மூஸ் நீரிணை வழியாக இந்திய சரக்கு கப்பல்கள் செல்ல ஈரான் அனுமதி வழங்கியுள்ளது.

இதனையடுத்து இந்திய கொடிகளுடன் வந்த புஷ்பக் மற்றும் பரிமல் ஆகிய 2 இந்திய சரக்கு கப்பல்களும் பாதுகாப்பாக ஹோர்மூஸ் நீரிணையை கடந்து பயணித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖

சிறப்பு விமானம்

மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் பதற்றத்தை தொடர்ந்து கத்தார் ஏர்வேஸ், அந்நாட்டிலிருந்து கூடுதலாக புதுதில்லி மற்றும் மும்பைக்கு தலா ஒரு விமானத்தை இன்று இயக்குகிறது.

ஏற்கனவே லெபனான் நாட்டிலிருந்து 177 இந்தியர்களும், கத்தாரிலிருந்து 500 பேரும் சிறப்பு விமானம் மூலம் தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கத்தாரில் வாழும் இந்தியர்களுக்கு பாஸ்போர்ட் விரைவாக கிடைக்கும் வகையில் தூதரகம் அனைத்து நாட்களிலும் செயல்படுவதாகவும், தட்கல் விண்ணப்பங்கள் மூலமான பாஸ்போர்ட் ஓரிரு நாட்களில் கிடைப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

உலக சிறுநீரக தினம்

உலக சிறுநீரக தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

சிறுநீரக ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வுடன் அதுசார்ந்த நோய்களை முன்னமே கண்டறிந்து பாதுகாப்பதன் அவசியத்தை மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே. பி. நட்டா வலியுறுத்தினார்

சுகாதார நடவடிக்கைகளின் ஒருபகுதியாக பிரதமரின் தேசிய டயாலிசிஸ் சிறுநீரக சுத்திகரிப்பு திட்டம் தொடங்கப்பட்டுள்ளதை அவர் எடுத்துரைத்தார்

இதன் கீழ் ஆயிரக்கணக்கான சுத்திகரிப்பு மையங்கள் மூலம் லட்சக்கணக்கான மக்களுக்கு உயிர்காக்கும் மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாக குறிப்பிட்டார்.

சிறுநீரக ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அனைவரும் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்த திரு. ஜே.பி.நட்டா அழைப்பு விடுத்தார்.

இதனிடையே சிறுநீரக பாதுகாப்பு குறித்து திருச்சியை சேர்ந்த மருத்துவ நிபுணர் டாக்டர் கிரி பேசுகையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

எரிவாயு விவகாரத்தில் பொதுமக்கள் அச்சமடைய வேண்டாம் என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

போதுமான அளவில் எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு, தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய முதலமைச்சர், பொதுமக்கள் பதற்றம் கொள்ள வேண்டாம் என தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு துணை நின்று மேற்காசிய நிலவரத்தை எதிர்கொள்வோம் எனவும் முதலமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ஆளுநர்

தமிழகத்தின் புதிய பொறுப்பு ஆளுநராக கேரள மாநில ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் இன்று பொறுப்பேற்றார்

சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

பதவியேற்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

அர்ச்சனா பட்நாயக்

தமிழக சட்டப்பேரவை தேர்தல் தொடர்பாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் இன்றுமாலை ஆலோசனை மேற்கொள்கிறார்.

வாக்குச்சாவடிகள், வாக்கு எண்ணும் மையங்கள், பதற்றம் நிறைந்த வாக்குச்சாவடிகள் உள்ளிட்டவை குறித்து இதில் ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில் சுயஉதவிக் குழுக்களுக்கு ஒருலட்சத்து 41 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி கடன் வழங்கப் பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 89 கோடி ரூபாய் மதிப்பில் முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து, புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பேசியஅவர், இன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் 4 லட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக குறிப்பிட்டார்.

பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களை சேர்ந்த 10 ஆயிரத்து 127 பயனாளிகளுக்கு 280 கோடி ரூபாய் மதிப்பலான நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

காந்தி

தமிழக அரசு பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. R. காந்தி தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆட்டுப்பாக்கம் அரசு கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாநில ஆயிரத்து 245 மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கி பேசியஅவர், அரசு பள்ளிகளில் சிறந்த மாணவர்கள் போட்டித் தேர்வுகள், உயர்கல்வி சேர்க்கைக்கான தேர்வுகளுக்கு பயிற்சி பெறலாம் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி

தூத்துக்குடி மாவட்டம் வேடநத்தம் கிராமத்தில் பாலியல் வன்கொடுமையில் மாணவி உயிரிழந்த சம்பவம் குறித்து 9-க்கும் மேற்பட்ட தனிப்படைகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே அப்பகுதி மக்கள் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று கோரி தூத்துக்குடி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் போராட்டம் மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

வன்கொடுமையில் மாணவி உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ள அவர், திமுக அரசு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

இந்தியன்வெல்ஸ் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதிக்கு யூகி பாம்ப்ரி, ஸ்வீடனின் ஆண்ட்ரரூ இணை முன்னேறியுள்ளது.

காலிறுதியில் இந்த இணை, ஆஸ்திரிய இத்தாலி இணையை இன்று வென்றது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் கிரண் ஜார்ஜ் – ஹாங்காங்கின் **Jason** னை இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை – ஜப்பான் இணையுடனும்

அர்ஜுன், **Hariharan** இணை – தைவான் இணையுடனும் இன்று மோதவுள்ளன.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖